# வளர்ச்சிப்பாதையில் சட்டக்கதிர்...

காலம், காலமாக சட்டங்கள் ஆங்கிலத்தில் இருப்பதால் பாரம்பரியமாக இந்தியாவில் மொழி வாரி மாநிலங்கள் இருந்த போதிலும், உயர்நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றத்தில் ஆங்கிலமே பயன்பாட்டு மொழியாக இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக பல நீதிமன்ற தீர்ப்புக்ககளை சட்டக் கல்வி கற்றறிந்த நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்துள்ளது, சாதாரண பாமர மக்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை. சென்னை உயர்நீதிமன்றத்திலும் 1857 முதல் இன்று வரை ஆங்கிலம் மட்டுமே பயன்பாட்டு மொழியாக இருந்து வந்துள்ளது.

இந்த சூழலில் 1975ம் ஆண்டு தமிழ்நாடு அரசு முதல்கட்டமாக மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதின்றங்கள் போன்றவற்றில் தமிழை அறிமுகப்படுத்தியதுடன், தமிழில் வாதாடவும் வழிவகை செய்தது. இருந்த போதிலும் வழக்கறிஞர்கள், நீதியரசர்கள், சட்ட வல்லுனர்கள், வழக்காளிகள், சட்டக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தமிழில் சட்டம் சார்ந்த செயல்முறை நடவடிக்கைகளை பெறுவதில் சிரமப்பட்டு வந்தனர். ஒருபுறம் அரசு கீழ்நிலை நீதிமன்றங்களில் தமிழை அமுல்படுத்த முனைப்பு காண்பித்த போதிலும், தமிழில் சட்ட இதழ்கள் இல்லாமையால், அவற்றை செயல்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. இந்த சூழலில் 23 ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழில் மாதாந்திர சட்ட இதழாக **சட்டக்கதிர்** தோற்றுவிக்கப் பட்டது.

**பதிவு:**

**சட்டக்கதிர்** ஒரு பதிவு பெற்ற மாதாந்திர சட்ட இதழாக சென்னை, தலைமை மாநகர நீதித்துறை நடுவர் அவர்களால் 1992ல் அறிவிப்பு செய்யப்பட்டது.

**சட்டக்கதிர் இதழின் துவக்கம்:**

**சட்டக்கதிர்** முதன் முதலாக சென்னை, அருங்காட்சியக அரங்கில் 29 அக்டோபர் 1992ம் நாள் சட்ட மாதாந்திர இதழாக அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசில் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளராக இருந்த முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் தலைமையேற்றார், நிகழ்ச்சியில் முதல் இதழை அன்றைய சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு ஏ.ஆர். லட்சுமணன் அவர்கள் வெளியிட, உயர்நீதிமன்ற முதுநிலை வழக்கறிஞர்கள் திரு ஆர்.காந்தி மற்றும் திரு ரவீந்திரன் ஆகியோர் முதல் நகலை பெற்றுக் கொண்டனர். வழக்கறிஞர் மற்றும் தொழிலதிபர் திரு ஆர்.வீரமணி, தமிழ் ஆய்வாளர் திரு நல்லபெருமாள், வழக்கறிஞர்கள், சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர், பொதுமக்கள் ஆகியோர் அந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**நோக்கமும், குறிக்கோளும்:**

உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கள், சட்டங்கள், விதிகள், நஐமுறைகள் ஆகியவற்றை தொடர்ந்து தமிழாக்கம் செய்து வெளியிட்டு அதன் மூலம் தமிழை நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்கச் செய்ய தொடர்ந்து முயற்சிப்பது என்ற நோக்கத்தில் சட்டக்கதிர் துவக்கப்பட்டது.

**சட்டம் சார்ந்த விபரங்கள்:**

**சட்டக்கதிரில்** உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற, சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் தீர்வுகள், சட்டம் சார்ந்த விமர்சனங்கள், சட்ட விதிகள், பல்வேறு தீர்ப்புகளின் மீதான ஆய்வுகள், சட்ட நிபுணர்களால் ஆங்கில நாளிதழ்கள் மற்றும் பல்வேறு பத்திரிகைகளில் எழுதப்படும் கட்டுரைகள் ஆகியவை தமிழாக்கம் செய்து பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

**மனித உரிமைகள்:**

**சட்டக்கதிரில்** மனித உரிமை சார்ந்த செய்திகள், மனித உரிமைகள் சார்ந்த தீர்ப்புகள், ஆணையத்தின் அறிக்கைகள், மனித உரிமை கல்வி சார்ந்த செய்திகள், தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஏற்படும் சட்டத் திருத்தங்கள் போன்றவை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. மனித உரிமை சார்ந்த விபரங்களை தொடர்ந்து வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் முன்னுரிமை கொடுத்து செயல்பட்டு வருகிறது.

**தமிழக அரசின் அங்கீகாரம்:**

நவம்பர் 1992ல் **சட்டக்கதிர்** மாத இதழ் தமிழக அரசின் கல்வித்துறை, மற்றும் பொது நூலகத் துறை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டு அனைத்து நூலகங்களுக்கும் சுற்றுக்கு விட வேண்டும் என்கிற வகையில் அனுமதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, வணிகம் மற்றும் தொழில்துறை, வேளாண்துறை. இந்து சமய அறநிலையத்துறை, உள்ளாட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை போன்றவற்றில் சந்தா செலுத்தி சட்டக்கதிரை தொடர்ந்து வாங்குவதற்கான அனுமதி அளிக்கப்பட்டது.

**உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல்:**

பின்னர் **சட்டக்கதிர்** உயர்நீதிமன்றத்தால் சட்ட இதழாக அங்கீகரிக்கப்பட்டதுடன், உயர்நீதிமன்றம் மற்றும் தமிழகம் முழுவதுமுள்ள நீதிமன்றங்களில் சட்டக்கதிர் வாங்குவதற்கு அனுமதியளித்தது. **சட்டக்கதிர்** மாண்புமிகு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட வல்லுனர்களின் பாராட்டைப் பெற்றதோடு, தொடர்ந்து அவர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

**சிறந்த சட்ட இதழுக்கான விருது:**

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறையில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பத்திரிகைகள், புத்தகங்களுக்கான விருது வழங்கும் நடைமுறை உள்ளது. அந்த வகையில் **சட்டக்கதிர்** சிறந்த சட்ட இதழ் என 2000ம் ஆண்டு விருதும், ரூ 20000/- பண வெகுமதியும் வழங்கி கௌரவிக்கப் பட்டது. அதன் வாயிலாக சட்ட இதழ்களில் பிரதி மாதமும் சட்டக்கதிர் இதழ் தயாரிப்பில் அதிக கவனத்தையும், நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி வருவது உறுதியாகிறது.

**10 வது ஆண்டு கொண்டாட்டம்:**

**சட்டக்கதிரின்** 10 வது ஆண்டு விழா சென்னை தாஜ் கோரமண்டல் விடுதி கூட்ட அரங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அது சமயம்

மாண்புமிகு நீதியரசர் திரு ஏ.ஆர்.லட்சுமணன் அவர்கள் தலைமை தாங்கியதோடு, உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு.ஜெகதீசன், திரு கே.கோவிந்தராஜன், மற்றும் வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்கள், பொது மக்கள் ஆகியோர் பங்கு பெற்று சிறப்பித்தனர்.

**இணையதளம் துவக்க விழா:**

2003ம் ஆண்டு சட்டக்கதிருக்காக தனியாக www.sattakadir.com இணையதளம் உருவாக்கப்பட்டது. சென்னை உட்லண்ட்ஸ் விடுதி கூட்ட அரங்கில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் மேற்படி இணையதளம் உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ஏ.ஆர்.லட்சுமணன் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் விழாவில் பங்கு பெற்றனர். அனைவர் முன்னிலையிலும் இணையதளம் காட்சித்திரையில் காண்பிக்கப்பட்டது.

**அனைவரையும் கவர்ந்த இணையதளம்:**

**சட்டக்கதிர்** இணைய தளம் உலகெங்கிலும் உள்ள சட்ட வல்லுநர்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. அதில் முந்தைய இதழ்கள், செய்திகள், புகைப்பட பதிவுகள், அறிக்கைகள், திட்டங்கள், சந்தா மற்றும் விளம்பர கட்டண விபரம் போன்ற அனைத்தும் அவ்வப்போது பதிவேற்றம் செய்யப்படுகிறது. இணையதளத்தின் பயன்பாடு காரணமாக **சட்டக்கதிரின்** மதிப்பு வெகுவாக உயர்ந்தது.

**சட்டக்கதிர் விருதுகள்:**

**சட்டக்கதிர்** சட்டம் சார்ந்தவற்றில் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக பல விருதுகளை நிறுவி வழங்கி வருகிறது. அவை சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது, சிறந்த சட்ட தமிழ் புத்தகத்திற்கான விருது, சிறந்த தமிழ் சட்ட இதழுக்கான விருது, தமிழில் சிறப்பாக வாதாடும் வழக்கறிஞருக்கான விருது, தமிழை முன்னிலைப்படுத்தும் சட்ட பேராசிரியர் விருது, சட்டக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான சிறந்த சட்ட அறிவிற்கான விருது ஆகியவையாகும். இத்தகைய விருதுகள் அவ்வப்போது தகுதியுள்ளோருக்கு வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

**சட்டக்கதிர் மின்னிதழ் துவக்கம்:**

2007ம் ஆண்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்வு ஒன்றில் சட்டக்கதிர் இதழுக்கான மின்னிதழ் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு சதாசிவம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்புமிகு கோகலே அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நீதியரசர்கள் சட்டக்கதிரின் தமிழ்ப் பணியை வெகுவாக பாராட்டினார்கள். நீதிபதி திரு சதாசிவம் அவர்கள் அனைத்து பொது நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், கிராம ஊராட்சி அலுவலகங்கள் அனைத்திலும் சட்டக்கதிர் வாங்கப்பட வேண்டும் என தெரிவித்தார்கள்.

**20ம் ஆண்டுவிழா கொண்டாட்டம்:**

**சட்டக்கதிரின்** 20 வது ஆண்டு விழா, மற்றும் உயர்நீதிமன்ற 150 வது ஆண்டு விழா ஆகியவற்றை கொண்டாடும் வகையில் சென்னை ராணி

சீதை மன்றத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் திரு சல்மான் குர்ஷித், உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு முகோபாத்யாயா, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாண்புமிகு தனபாலன், மாண்புமிகு வெங்கட்ராமன், மற்றும் உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு ஏ.ஆர்.லட்சுமணன் ஆகியோர் பங்கு பெற்றனர். உயர்நீதிமன்றத்தில் தமிழை பயன்பாட்டு மொழியாக ஆக்க வேண்டிய அவசியம் குறித்து பலர் பேசினார்கள். அந்த நிகழ்ச்சியில் உயர்நீதிமன்றத்தில் தமிழ் என்ற ஆசிரியர் முனைவர் திரு விஆர்எஸ். சம்பத் அவர்களின் நூல் மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. அது சமயம் சட்ட தமிழ் எழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி வெகுவாக பல செய்திதாள்களில் பிரசுரிக்கப்பட்டதோடு, காட்சி ஊடகங்களாலும் காண்பிக்கப்பட்டது.

**நீதியரசர்களை கௌரவிப்பது:**

**சட்டக்கதிர்** சார்பில் அவ்வப்போது நீதிபதிகள், வழக்கறிஞர்களை கௌரவிப்பதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. சட்டக்கதிர் சார்பில் நீதிபதி மாண்புமிகு கே.என்.பாட்சா, மாண்புமிகு வெங்கட்ராமன் ஆகிய உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பணி ஓய்வு பாராட்டு விழா சிறப்பாக நடத்தப் பட்டது. அவர்கள் சட்டத்துறைக்கு ஆற்றிய சிறப்பான பணிகளை பாராட்டிய நிகழ்வில் பல சட்ட வல்லுநர்கள், வழக்கறிஞர்கள், திரளாக ஜிஆர்டி கூட்ட அரங்கில் பங்கேற்றனர்.

**சட்ட உதவி:**

**சட்டக்கதிர்** துவங்கிய 1992 துவங்கி இன்று வரை அவ்வப்போது அதன் வாசகர்களுக்கு சட்ட உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் சுமார் 1000 வரை விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. அதில் எங்களால் இயன்ற சட்ட உதவிகள் செய்யப்படுவதுடன், சில விண்ணப்பங்கள் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள சட்ட உதவி மையத்திற்கும் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. இவை தவிர தேவைப்படுகிற இனங்களுக்கு சட்ட வல்லுநர்கள், முதுநிலை வழக்கறிஞர் களுக்கு கடிதம் எழுதி இலவச சட்ட உதவிக்கான ஏற்பாடு செய்யப் படுகிறது.

**சட்டக்கதிர் பிரசுரங்கள்:**

**சட்டக்கதிர்** சார்பில் அவ்வப்போது பல நூல்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் நீதித்துறை வரலாறு, சட்டமும் சமுதாயமும், சென்னைக்கு அப்பால் உலகைச்சுற்றி ஒரு பார்வை, உயர்நீதிமன்றத்தில் தமிழ் போன்ற பல நூல்கள் பிரசுரிக்கப்பட்டு பலரின் பாராட்டை பெற்றுள்ளது.

**சட்டக்கதிரின் முந்தைய இதழ்கள்:**

சட்டக்கதிரின் முந்தைய இதழ்கள் பல வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவற்றிற்கு அப்பாற்பட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் முந்தைய இதழ்களின் 14000 பிரதிகள் வாங்கப்பட்டு பல துறைகளுக்கு

சுற்றுக்கு அனுப்பப்பட்டது, சட்டக்கதிரின் திறனுக்கு சான்றளிப்பதாக அமைந்தது. இவை அண்ணா கிராமப்புற நூலகத் திட்டத்தின் கீழ் வாங்கியளிக்கப்பட்டது. பல வழக்கறிஞர்களுக்கு சுட்டிகளாக முந்தைய வழக்கு விபரங்களை பார்ப்பதற்கு சட்டக்கதிர் பயன்பட்டு வருகிறது.

**கண்காட்சிகள்:**

சட்டக்கதிர் சார்பில் அவ்வப்போது கண்காட்சிகள் நடத்தப்பட்டு முந்தைய இதழ்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அவற்றை பார்வையிடும் பார்வையாளர்கள் கவனத்தை ஈர்ப்பதுடன், அதன் வாயிலாக சட்டக்கதிரின் சந்தா அதிகரித்து வருகிறது.

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி:**

சட்டக்கதிர் ஆசிரியர் முனைவர் விஆர்எஸ். சம்பத் அவர்கள் தொடர்ந்து பல தேசிய மற்றும் சர்வதேச அளவிலான கருத்தரங்கங்களில் பங்கு பெறுவதுடன், ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்து வருகிறார். மேலும் அத்தகைய கருத்தரங்கங்களில் கிடைக்கப்பெறும் சட்ட நூல்களிலிருந்து சட்டக்கதிரின் தரம் உயர்த்தப்படுவதுடன், சிறப்பான ஆய்வு கட்டுரைகளும் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப்பட்டு வருகிறது. பத்திரிக்கை துறை என்பது சர்வதேச அளவில் ஒரு போட்டி மிகுந்த துறையாக இருக்கும் சூழலில் தொடர்ந்து சிறப்பான கட்டுரைகளின் வாயிலாக சட்டக்கதிர் ஒரு முதநிலை பத்திரிகையாக வெற்றிகரமாக வலம் வந்து கொண்டிருக்கிறது.

**மலேசியாவில் சட்டக்கதிர்:**

2005ம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற ஒரு வண்ண விழாவில் மலேசியா மற்றும் கோலாலம்பூர் தமிழ் மக்கள் மத்தியில் சட்டக்கதிர் அறிமுகப்படுத்தப்பட்டது. முனைவர் டத்தோ சாமிவேல் அவர்கள் இதனை அறிமுகப்படுத்தினார். அன்றைய நிகழ்வில் பங்கேற்றவர்களில் 200 பேர் அன்றைய தினமே சந்தாதாரராக தம்மை இணைத்துக் கொண்டது, சட்டக்கதிரின் செயல்பாட்டை பாராட்டும் நிகழ்வாக அமைந்தது.

**சிறப்பான பாராட்டு:**

**சட்டக்கதிர்** தனது சிறப்பான இதழ்களின் வாயிலாக தொடர்ந்து சட்டத்துறை சார்ந்த பலரின் நம்பிக்கையை பெற்றதோடு, பலரின் பாராட்டையும் பெற்று வருகிறது. நீதித்துறையின் முன்பாக சட்டரீதியாக போராடி நியாயம் பெறுவதற்கு தீர்ப்புகளை தமிழில் படித்து உணர்ந்து கொள்வதன் மூலம் சாத்தியமாகிவருகிறது. திருச்சியில் சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் சட்டக்கதிர் ஆசிரியர் முனைவர் விஆர்எஸ்.சம்பத் அவர்கள் அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டது, சட்டக்கதிரின் நம்பகத்தன்மைய உயர்த்திப்பிடிப்பதாக அமைந்தது. அதே போல் புதுச்சேரி பாரதிதாசன் தமிழ் மன்றம், லயோலா கல்லூரி தமிழ்த்துறை ஆகியோர் சட்டக்கதிர் ஆசிரியரை அழைத்துப் பாராட்டி விருதுகள் வழங்கியுள்ளனர். உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ராஜு அவர்கள் சட்டக்கதிரின் சேவையை பாராட்டியுள்ளார். இது போன்ற பாராட்டுக்களும், விருதுகளும் சட்டக்கதிரின் தமிழ் சேவையை, நம்பகத்தன்மையை நிலைநாட்டுவதோடு, சமூகத்திற்கான பங்களிப்பையும் பாராட்டுவதாக அமைகிறது.

**சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்:**

சந்தாதாரர்களுக்கு அஞ்சல் வழியாகவும், மற்றபடி தமிழகம் முழுவதற்கும் திருவாளர்கள் ஹிக்கின்பாதம்ஸ் நிறுவனத்தின் வாயிலாகவும் சட்டக்கதிர் இதழ்கள் கொண்டு சேர்க்கப்படுகிறது. இவை தவிர தமிழகத்தில் பல இடங்களில் சில தனியார் புத்தக நிறுவனங்களும் சட்டக்கதிரை வாங்கி விற்பனை செய்கின்றனர். மேலும் சட்டக்கதிர் இதழ் ஏறக்குறைய 20 நாடுகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதிலிருந்தே உதாரண சுட்டி வழக்காக பயன்படுத்த சட்டக்கதிர் ஒரு சிறந்த சட்ட இதழாக பயன்படுகிறது என்பது தெளிவாகும்.

**விளம்பரம்:**

தமிழகத்தின் தலை சிறந்த நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவை சட்டக்கதிரில் விளம்பரம் செய்து, தங்களது வளர்ச்சியை, வியாபாரத்தை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

**வளர்ச்சிக்கான திட்டம்:**

அதிகரித்துவருகிற தேவையினை கருத்தில் கொண்டும், சந்தாவை அதிகப்படுத்தி பலரை சென்றடையும் நோக்கத்திலும், சட்டக்கதிர் மாத இதழை 15 நாட்களுக்கொருமுறை வெளிவரும் இதழாக எதிர்காலத்தில் மாற்றும் திட்டமும் கைவசமுள்ளது. அதற்கான நிதி ஆதாரத்திற்கு சமூகப் பங்களிப்பு என்ற வகையில் பல பெரிய நிறுவனங்களில் நன்கொடை பெறுவது, தமிழக அரசின் மற்றும் பொதுமக்களின் ஆதரவை நாடுவது என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பங்களிப்பு – நிதிஆதாரம்:**

**சட்டக்கதிர்** அதன் வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட்டு, சமூக சேவையாற்றிட கார்ப்பரேட் நிறுவனங்கள், நன்கொடையாளர்கள், நலம் விரும்பிகள் போன்ற அனைவரிடமிருந்தும் நன்கொடை எதிர்நோக்குகிறது.

**ஆசிரியர், மற்றும் பிரசுரிப்பாளர்:**

சட்டக்கதிர் அரசு சாரா நிறுவனம் ஒன்றை நடத்தி வருபவரும், சமூகத்தில் மிகவும் பிரபலமானவருமான **முனைவர் விஆர்எஸ்.சம்பத்** என்ற வழக்கறிஞரால் நடத்தப்பட்டு வருகிறது. அவர் உலகம் முழுவதிலும் ஏறக்குறைய 25 நாடுகளுக்கு சென்று வந்தவர்.

**ஆசிரியர்கள் குழு:**

| | |
|---|---|
| ஆசிரியர், பிரசுரிப்பாளர் | : முனைவர் விஆர்எஸ்.சம்பத் |
| சிறப்பு ஆலோசகர்கள் | : முனைவர் அவ்வை நடராஜன்<br>முனைவர் நாகபூஷணம்<br>முன்னாள் துணை வேந்தர்கள் |
| முதுநிலை வழக்கறிஞர்கள் | : திரு ஆர்.காந்தி<br>: திரு ஆர்.விடுதலை<br>: திரு ஆர்.சண்முகசுந்தரம் |

|  |  |
|---|---|
|  | : திரு ஏ.தியாகராஜன் |
| சட்ட வல்லுநர்கள் | : திரு கே.பார்த்தசாரதி |
|  | : பேராசிரியர் ஆர்.வி.தனபாலன் |
|  | : முனைவர் முத்துவேலு |
|  | : முனைவர் ஆர்.மீனாட்சிசுந்தரம் |
| வழக்கறிஞர்கள் | : திரு வி.ரவி |
|  | : திரு ட்டி.வீரசேகரன் |
|  | : திரு எஸ்.நாகநாதன் |
|  | : திரு ஏ.என்.புருஷோத்தமன் |
| ஆசிரியர் குழு | : திரு பகலவன் சேது |
|  | : முனைவர் அரவிந்தன் |
|  | : பேராசிரியர் அழகரி |
|  | : திரு எஸ்டி.அரங்கநாதன் |
|  | : திரு வி.கதிரவன் |
| மோழிபெயர்ப்பாளர்கள் | : திருமதி சாந்தி |
|  | : திரு எஸ்.சம்பத், மதுரை |
| ஒருங்கிணைப்பாளர்கள் | : திரு பாவேஷ்கண்ணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் |
|  | : திருமதி இந்திரா, டெல்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் |
|  | : திரு சாரங்கபாணி பங்களூரு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் |

**சட்டக்கதிர் நிறுவனம்:**

**சட்டக்கதிர்** நிறுவனம் நிறுவப்பட்டு இலவச சட்ட உதவி, சட்டம் சார்ந்த பிரசுரங்கள் கொணர்வது, மாநாடுகள், பயிலரங்கங்கள் நடத்துவது, சட்டம் மற்றும் அமைதி சார்ந்த குறுகிய கால பயிற்சிமுகாம்கள் நடத்துவது, வெகுமதியாக சட்டக்கதிர் இதழ்களை அளிப்பது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**நிறைவாக சட்டக்கதிர்** சட்ட மாத இதழ் நீதித்துறையில் தமிழ் வளர்ச்சியை மேம்படுத்த தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சட்ட பயன்பாட்டில் தமிழை கொண்டுவருவதற்கான அதன் தொடர்ச்சியான பணி தமிழகம் முழுவதிலும் வெகுவாக பாராட்டினை பெற்று தனது பணியினை செவ்வனே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**உண்மையான நீதி என்பது நீதிமன்றங்களில் தமிழில்**
**பகரப்படும் நாளை நோக்கி எமது பயணம்**
**உங்கள் ஆதரவோடு தொடர்கிறது.**